**பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு அரசியலமைப்புத் திருத்தத்திற்கு சமர்ப்பிக்கும் முன்மொழிவுகள்**

**புதிய அரசியல் யாப்பு வரைவினை உருவாக்குவதற்காக, நிபுணர் குழுவிற்கு**

**டிசம்பர் 2020**

இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பானது இலங்கையின் இறைமை கொண்ட மக்களால் 1978ம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு இன்றுவரை 20 வெற்றிகரமான திருத்தங்களுக்கும் உள்ளாகியுள்ளது. இலங்கை மக்களாகிய மீயுயர் இறைமையின் நீட்சிகளாக அமையும் சட்டத்தின் ஆட்சி, அதிகாரப் பிரிவினை, இறைமை, அடிப்படை உரிமைகள், வாக்குரிமையும் தேர்தல்களும், அரசமைப்பின் ஏற்பு ஆகிய கொள்கைகளின் எல்லைக்குள், மக்களிடமிருந்து பிரிக்கமுடியாத இறைமையை அரசாங்கத்தின் கிளை அமைப்புகளுக்கு உருமாற்றும் அத்திவாரக்கல்லே அரசியலமைப்பாகும். அரசியலமைப்புப் பற்றிய நவீன சிந்தனையானது, இலங்கை போன்ற பெரிதும் பன்மைத்துவ சமூகத்தைக் கொண்ட நாடொன்றின் மக்களது பல்வகைப்பட்ட அபிலாசைகளையும் பிரதிபலிப்பதற்காக இயங்கும் தன்மை கொண்டதும் கடந்துசெல்லும் பாங்குடையதுமான அரசியலமைப்புக்களையே வேண்டி நிற்கின்றது. பல்லாண்டுகளாக போற்றி ஏற்கப்பட்டதும் மீறமுடியாத் தன்மை கொண்ட உலகப்பொதுவான கோட்பாடுகளாக நிறுவப்பட்டதுமான நெறிமுறைகளையும் கொள்கைகளையும் பிரதிபலிக்கும் ஒரு சர்வதேச உறுப்பு எனும் வகையில் இலங்கையை பிரதிபலிக்கும்படியான விழைவுடனுமேயே ஒரு நவீன அரசியலமைப்பு இருக்கவேண்டும். அதனால், மேற்சொன்ன அனைத்தையும் பிரதிபலிப்பதாகவும், மக்களுக்கு; மக்களால்; மக்களுடையதான ஒரு அரசியலமைப்புக்கு தகுதியுடையவர்களான இலங்கை மக்களது ஆழ்ந்த எதிர்பார்ப்புக்குரிய, இயங்கும் தன்மை கொண்ட அரசாங்கத்துக்கும் குடிமக்களுக்கும் அதிகம் பொருந்தும்படியானதுமாக இருக்கவேண்டியதும் அவசியமாகும்.

கீழ்வரும் சமர்ப்பிப்பானது, பின்வரும் மூலங்களிலிருந்து வரைவாக்கம் பெற்ற ஒரு தொகுப்பு ஆவணமாகும்:

- *Consolidated Submissions on Proposed Constitutional Provisions Related to Women's Rights, Gender Equality and Electoral Reforms by Women's Groups and Networks to the Public Representations Committee on Electoral Reforms - March 10, 2016*

- *The Report on Strengthening Women's Rights in the Constitution by the Working Committee on Gender Perspectives on Constitutional Reform - August 22, 2016*

- *The Report on Public Representations on Constitutional Reforms by the Public Representations Committee on Constitutional Reform - May 2016*

56/1, සරසවි මාවත, කාසල් වීදිය, කොළඹ 8, ශ්‍රී ලංකාව
சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை.
Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka

Telephone: +94-11-2690192, 5632045, 5635900, 5635800, 2690201, Fax: +94-11-2690192, 2690201, Email: wmcsrilanka@gmail.com
www.womenandmedia.org facebook.com/womenandmediacollective twitter.com/womenandmedia

Registration No. GA 2476

பின்வரும் சமர்ப்பிப்பு, அரசியலமைப்பில் பெண்களது அரசியல், குடிசார், சமூக உரிமைகளை வலியுறுத்துவதாக அமையும் அதே வேளை, புதிய அரசியலமைப்பில் சேர்க்கப்படவேண்டிய மிக அவசியமான விடயங்களையும் முன்மொழிகிறது.

## B) அடிப்படை உரிமைகள்

அடிப்படை உரிமைகள் எனும் பகுதியின் கீழ் பின்வருவன பற்றி பரந்துபட்ட அளவில் முன்மொழிவுகளை முன்வைத்துள்ளோம்.

1. அரசியலமைப்பில் தற்போது ஏற்கப்பட்டிருக்கும் உரிமைகளை விரிவுபடுத்துதல்.
2. அடிப்படை உரிமைகள் எனும் அத்தியாயத்தில் புதிய உரிமைகளை சேர்த்தல்.
3. புதிய அரசியலமைப்பு வரும் வேளையில் நடைமுறையில் இருக்கும் சட்டங்கள், வழக்காறுகள், மரபுகள் போன்றவை தொடர்பான மீளாய்வினை வழங்குதல்.

1. **அரசியலமைப்பில் தற்போது ஏற்கப்பட்டிருக்கும் உரிமைகளை விரிவுபடுத்துதல்.**

- தற்போதைய அரசியலமைப்பின் உறுப்புரை 12 (2) இன் பாகுபாட்டுக்கு எதிரான வாசகம் பின்வரும் மேலதிக விடயத்தளங்களை உள்ளடக்க வேண்டும்.
- இனம், மதம், சாதி, திருமண நிலை, மகப்பேறு, வயது, மொழி, உள-உடல் தகவின்மை, கருத்தரிப்பு, குடிமை நிலை, துணைவர் இழப்பு, பாலியல் நோக்குநிலை, பாலியல் - பால்நிலை அடையாளங்கள் போன்ற அடிப்படைகளின் பேரில் எவரும் பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படக் கூடாது.
- சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதுடன், அனைவரும் சட்டத்தினால் கிடைக்கும் நலன்களுக்கும் பாதுகாப்புக்கும் சம உரித்துடையவர்கள் என்பதையும் நாம் முன்மொழிகிறோம்.
- பராமரிப்பு பொருளாதாரத்தில் உள்ள பெண்களின் பணிகள், உற்பத்தித் தன்மை கொண்ட பணியாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என முன்மொழிகிறோம். இதன் மூலம் உறுப்புரை 14(1) g இல் தற்போது குறிப்பிடப்பட்டபடியான, வேலை ஒன்றில் பங்கெடுப்பதற்கான சுதந்திரத்தினுள் இப்பணிகளும் ஒருங்கிணைக்கப்படும்.

2. **அடிப்படை உரிமைகள் எனும் அத்தியாயத்தில் புதிய உரிமைகளை சேர்த்தல்**.

- வாழ்வதற்கும் கண்ணியமாக நடத்தப்படுவதற்குமான அனைவரதும் உரிமை வெளிப்படையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என நாம் முன்மொழிகிறோம்.

- அனைத்து வடிவங்களிலுமான வன்முறைக்கும் தீங்கிழைப்புக்கும் உட்படாதிருக்கும் உரிமையை அனைவரும் கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டும். அத்துடன், அனைவரும் சித்திரவதைக்கும் கீழ்மைப்படுத்தலும் உள்ளாகாமல் இருக்கும் உரிமையையும் தனிப்பட்ட இடங்களிலும் பொது இடங்களிலும் குரூரமானதும் மனிதத்தன்மையற்றதுமான விதத்தில் நடத்தப்படாதிருக்கும் உரிமையையும் கொண்டிருக்கவேண்டும்.

- நீதிக்கான அணுக்கமும் ஓர் அடிப்படை உரிமையாக உள்ளடக்கப்பட வேண்டும். அனைவருக்கும் நீதிக்கான வினைத்திறன் மிக்க அணுக்கத்தை அரசு உறுதிப்படுத்துவதுடன், அதற்கு கட்டணங்கள் ஏதும் வேண்டியிருந்தால், அக்கட்டணங்கள் நியாயமானதாக இருப்பதுடன் நீதிக்கான அணுக்கத்தை தடுப்பதாக அமையக்கூடாது.

- கல்வி, சுகாதாரம், உணவு, வீட்டுவசதி, தூய்மைவசதி ஆகியவற்றை அனைத்து குடிமக்களுக்குமான அடிப்படை உரிமைகளாக உள்ளடக்கும், பொருளாதார சமூக பண்பாட்டு உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை கொண்டிருக்கும் உரிமைகளை இவ் அரசியலமைப்பு உள்வாங்கிக்கொள்ள வேண்டும் என நாம் முன்மொழிகிறோம்.

- அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளின் முழுமையான நடைமுறையாக்கத்தை அடைவதற்கு தனது வளங்களின் உச்ச அளவினைப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை அரசு பொறுப்பேற்கும்.

- உரிய வயதை அடைந்த அனைவரும் இனம், தேசிய இனம் அல்லது மதம், பால்நிலை அடையாளம் அல்லது பால்நிலை, பாலியல் நோக்குநிலை ஆகியவற்றின் அடிப்படையிலான எந்தவொரு மட்டுப்பாடுகளும் இன்றி திருமணம் செய்வதற்கும் குடும்பம் ஒன்றை உருவாக்குவதற்குமான உரிமையினை கொண்டிருக்க வேண்டும். திருமணத்திலும் மணவுறவின் போதும் மணமுறிவின் போதும் அவர்கள் சம உரிமையைக் கொண்டிருக்கவேண்டும்.

- திருமணமானது இரு தனியாட்களதும் ஒப்புதலை மட்டுமே அடிப்படையாகக் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் 18 வயதுக்குக் குறைவான எவரும் திருமணம் செய்யக் கூடுமானதாய் இருத்தலாகாது.

- தொழில், ஊதியம் போன்ற விடயங்களில் இனம், மதம், சாதி, பல், பால்நிலை, மண நிலை, மகப்பேறு, வயது, மொழி, உள அல்லது உடல் தகவின்மை, கருத்தரிப்பு, குடிமை நிலை, பாலியல் நோக்குநிலை ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட பாகுபாடுகளை தடை செய்யும்படியான உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும். அரசானது, தொழிலாளர் உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதுடன் எல்லாத் தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பான பணிச்சூழலை வழங்குவதற்கான தொழில் வழங்குநரின் பொறுப்பினையும் வலியுறுத்த வேண்டும்.

3. **புதிய அரசியலமைப்பு வரும் வேளையில் நடைமுறையில் இருக்கும் சட்டங்கள், வழக்காறுகள், மரபுகள் போன்றவை தொடர்பான மீளாய்வினை வழங்குதல்.**

- தற்போதைய அரசியலமைப்பின் 16வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, இப்போதுள்ள எழுதப்பட்ட, எழுதப்படாத சட்டங்கள் அனைத்தும் அடிப்படை உரிமைகள் தொடர்பான உறுப்புரையுடன் ஒத்திசையாதிருந்தாலும் கூட செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாயிருக்கும். புதிய அரசியலமைப்பில் இவ் ஏற்பாடு அப்படியே எடுத்தாளப்படக் கூடாது என நாம் முன்மொழிகிறோம்.

- அடிப்படை உரிமைகள் பற்றிய உறுப்புரைகளானவை , அரசியலமைப்பில் ஏற்கப்பட்டிருக்கும் உரிமைகளுக்கு, எழுதப்பட்டதும் எழுதப்படாததுமான சட்டங்கள் அனைத்துமே ஒத்திசைவுடையனவாய் இருக்கவேண்டும் என்பதை உறுதிப்படுத்தும் கடப்பாட்டினை அரசுக்குச் சுமத்த வேண்டும்.

- நீதித்துறை மீளாய்வுக்கான இயலுமையை நீதிமன்றத்திற்கு அனுமதிப்பதன் மூலம் கடந்த, தற்போதைய, பிந்தைய சட்டவாக்கங்களை மீளாய்வு செய்வதற்கும் இரத்து செய்வதற்குமான ஒரு பொறிமுறை ஏற்பாட்டின் மூலம் இது நடைமுறைப்படுத்தப்படலாம்.

## D) அரசுக் கொள்கையின் வழிகாட்டற் கோட்பாடுகள்

- அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான பொதுமக்கள் கருத்தறிகுழுவின் அறிக்கையானது அரசுக் கொள்கையின் வழிகாட்டற் கோட்பாடுகளுடைய விரிவான பட்டியலினைக் கொண்டிருக்கிறது. இக் கோட்பாடுகளின் சாரத்தை வரவேற்கும் அதேவேளை, வழிகாட்டும் கோட்பாடுகளின் ஆட்சி என்பதை விட, அவற்றின் இருபொருள்படாத தன்மைக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக நாம் அவற்றை "அரசின் கடப்பாடு" என்பதாக சட்டகப்படுத்துவதைப் பரிந்துரைக்கிறோம். இந்த மாற்றமானது, அரசின் கடப்பாடுகளை வலியுறுத்தும் சர்வதேச வளர்ச்சிப் போக்குகளோடும் சட்டங்களோடும் ஒத்திசைவைப் பேணும்.

- "அரசின் கடப்பாடுகள்" எனும் சொல்லானது, நீதியாய்வுக்குத் தக்கதல்லாத வழிகாட்டல்களுக்கு மாறாக, அரசோடு தொடர்புபட்ட கடமைகளுக்கு உடன்படிவதற்கு அரசுக்குள்ள கடப்பாட்டினை வலியுறுத்தி நிற்கிறது.

- அரசின் கடப்பாடுகளானவை வழக்கமான விழிப்புக்கவன நடைமுறைகளுக்கு மாறாக, நீதியாய்வுக்குத் தக்கதாக இருக்கவேண்டும் என நாம் முன்மொழிகிறோம். அரசின் கடப்பாடுகளுக்கும் அடிப்படை உரிமைகளுக்குமான வேறுபாடானது, அரசின் கடப்பாடுகளின் கீழ் நீதிமன்றத்தின் சட்டவரம்பினை வேண்டும் ஒருவர், அவ்வாறான கடப்பாடு தொடர்பான தனிப்பட்ட உரிமையையோ தீர்வையோ தமக்குப் பயன்படுத்திக்கொள்ளும் இயலுமையை கொண்டிருக்க மாட்டார். அவ்வாறான ஒருவர் ஒரு வழிகாட்டலையோ அல்லது அரசானது பொதுவாக அதன்

கடப்பாடுகளுக்கு உடன்படிவதற்கான பொருத்தாமான ஆணையையோ நாடுவதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார்.

- அரசின் கடப்பாடுகளானவை, அரசியலமைப்பில் கட்டாயமாக அரசின் கடப்பாடுகளாக திண்மையாக உள்ளடக்கப்படவேண்டிய நடப்பிலுள்ள கடப்பாடுகளின் வரிசையினை அங்கீகரிக்கும் நலன்பேணலுக்கான இலங்கை அரசின் வரலாற்றுரீதியான ஈடுபாட்டினை கட்டாயமாக கொண்டிருக்கவேண்டும்.

- அரசின் கடப்பாடுகளானவை, அதன் மக்களிடையேயும் சமூகங்களிடையேயுமான மீளிணக்கப்பாட்டினை ஊக்குவிக்கும் அரசின் கடப்பாட்டினையும் அங்கீகரிக்க வேண்டும்.

- நிறைவேற்றுத் துறையால் அதன் அரசியலமைப்பு ரீதியான அதிகாரத்தின் கீழ் செய்யப்படும் நியமனங்களில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் கடப்பாட்டினை கருத்திலெடுக்கவேண்டும் என்பதை அரசானது உறுதிப்படுத்தவேண்டும்.

- அரசியலமைப்பில் அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமைகளை மீறும் எந்தவொரு தனியாள், கூட்டுரு நிறுவனம், அரசு அல்லாத தரப்பு மீதும் நடவடிக்கை எடுக்கும் கடப்பாட்டினை அரசானது கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டும்.

## E) நிறைவேற்றுத் துறை

- மேலும், 20ம் திருத்தத்தில் உள்ளவாறான பாராளுமன்ற சபை மாற்றப்பட்டு, பெண்களுக்கான ஒரு பிரதிநிதியும் பொதுமக்களிடையேயிருந்து இரு பிரதிநிதிகளும் உள்ளடங்கும் விதத்தில் 19ம் திருத்தத்தில் இருந்தவாறான அரசியலமைப்பு சபை மீளக் கொண்டு வரப்படவேண்டும் என்பதை நாம் முன்மொழிகிறோம்.

- ஐக்கிய அமெரிக்க நாடுகளின் காங்கிரஸ் விசாரணைகளை ஒத்ததாகவும், அனைத்து விசாரணைகளும் பொது மக்கள் பார்வையில் நிகழும் விதமான பொருத்தமான பிரதிநிதித்துவ உரிமைகளைக் கொண்டதுமான வெளிப்படையான விசாரணைகளையும் நடைமுறைகளையும் புதிய அரசியலமைப்பானது நிறுவ வேண்டும்.

- மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்புத் தகுதி வழங்கப்பட வேண்டும் என நாம் முன்மொழிகின்றோம்.

- அமைச்சரவையானது ஆகக்குறைந்தது 1/3 பங்கு பெண்களைக் கொண்டிருக்க வேண்டும் என நாம் முன்மொழிகின்றோம்.

- அமைச்சர்களின் விடயங்களையும் பணிகளையும் நிர்ணயிக்கும்போது பாதுகாப்பு, நிதி, சுற்றுச்சூழல், விவசாயம், வலுவும் சக்தியும், கல்வி, சுகாதாரம், சுற்றுலாத்துறை, பெண்கள் ஆகியவை உள்ளடங்கலாக, அரசியலமைப்பின் அடிப்படையில் நியமிக்கப்படவேண்டிய குறிப்பிட்ட சில அமைச்சுக்கள் இருப்பது கட்டாயமாக்கப்படவேண்டும் என நாம் முன்மொழிகின்றோம்.

- பெண்களுக்கான ஆணைக்குழு ஒன்றை நிறுவும் ஏற்பாடு சட்டரீதியாக பாராளுமன்றத்துக்கு வழங்கப்படவேண்டும்.

அவ்வாறான சட்டமொன்றின் ஏற்பாடுகளானவை,

a) அவ் ஆணைக்குழுவின் உறுப்பினர்களது நியமனமானது, அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் பேரில் சனாதிபதியினால் செய்யப்படல்.

b) அரசுக்கு பரிந்துரைகள் வழங்குவதற்கும் அரச உறுப்புக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்கும், அரசியலமைப்பின் கீழ், அல்லது மேற்சொன்ன பெண்களுக்கான சட்டத்தின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்ட உரிமைகளை மீறியதாகக் காணப்படும் எந்தவொரு அரசு-அல்லாத தரப்புக்கும் வழிகாட்டல்களையும் பரிந்துரைகளையும் வழங்குவதற்குமான அதிகாரங்களை உள்ளடக்கியதாக இவ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் அமையும்படி செய்தல் வேண்டும்.

c) பெண்களுக்கு எதிரான அனைத்து பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான உடன்படிக்கை (CEDAW) யினையும் இலங்கை ஒரு தரப்பாகவுள்ள, பெண்களது உரிமை தொடர்பான எந்தவொரு சர்வதேச உடன்படிக்கையினையும் நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

- உறுப்புரை 41(b) இன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள பல்வேறு ஆணைக்குழுக்குமான நியமனங்கள் கட்டாயமாக 1/3 பங்கு பெண் பிரதிநிதிகளுக்கான ஒதுக்கீட்டினைக் கொண்டிருக்க வேண்டும் என நாம் முன்மொழிகின்றோம்.

## F) சட்டவாக்கத் துறை

உயர்நீதிமன்றத்தின் ஒத்திசைவின்மை பிரகடனங்களை செயற்படுத்தும் விதமாக பொருத்தமான சட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை சட்டவாக்கத்துறைக்கு உள்ளது. நடப்பிலுள்ள குறிப்பிட்ட சட்டம், நடைமுறை, வழக்காறு அல்லது மரபானது அடிப்படை உரிமைகள் உறுப்புரைக்கு மாறானதாகக் காணப்படுமிடத்து, உயர்நீதிமன்றத்தினால் ஒத்திசைவின்மை தீர்மானம் மேற்கொள்ளப்படுவதை இது இயலுமானதாக்கும்.

**G) சர்வசன வாக்கெடுப்பு உட்பட, வாக்குரிமையும் தேர்தல்களும்**

- தேர்தல் முறை சீர்திருத்தங்களுக்கான முன்மொழிவுகளை கருத்திற்கொண்டு, கீழே குறிப்பிடப்பட்டவற்றை செயற்படுத்துவதற்கான சட்டங்களை உருவாக்கும் அவசியம் உள்ளடங்கலாக, அரசியலமைப்பின் 101வது உறுப்புரையை ஒத்த ஏற்பாடொன்று புதிய அரசியலமைப்பில் சேர்க்கப்படவேண்டும் என நாம் முன்மொழிகிறோம்.

- இலங்கையின் தேர்தல் முறையானது, ஐம்பது (50) சதவீத ஆசனங்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலமும் மீதி ஐம்பது (50) சதவீத ஆசனங்கள் பெரும்பான்மைவாத, எளிய பன்முகத்தேர்தல் (first past the post) முறை மூலமும் தெரிவு செய்யப்படும் கலப்பு உறுப்பினர்கள் கொண்ட விகிதாசார முறையாக அமைய வேண்டும்.

- பெரும்பான்மைவாத முறைமையின் கீழ் ஒவ்வொரு கட்சியிலிருந்தும் எளிய பன்முகத் தேர்வு இருக்கைகளுக்காக நியமிக்கப்படும் வேட்பாளர்களின் மொத்த எண்ணிக்கையில் ஆகக்குறைந்தது பாதியளவான எண்ணிக்கையிலாவது பெண்கள் இருக்கவேண்டும். பெண்கள், பதிவுசெய்யப்பட்ட கட்சிக்குள்ளே பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்வதையும் வேட்பாளர் நியமன பட்டியலில் உள்ளடக்கபடுவதையும் உறுதிப்படுத்தும் விதமான சட்டப் பிரகடனங்களை அரசியலமைப்பானது கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும்.

- தேர்வு செய்யப்படும் எந்தவொரு அமைப்பும், விகிதாசார பிரதிநிதித்துவத்திலும் தேசியப் பட்டியலிலும் உள்ள மொத்த வேட்பாளர் எண்ணிக்கையில், ஒவ்வொரு பாலை சேர்ந்தவர்களும் நாற்பது சதவீதத்துக்கு (40%) குறையாமலும் அறுபது சதவீதத்துக்கு (60%) மிகாமலும் ஆண்களும் பெண்களும் நியாயமான சமநிலையில் இருக்கும் விதமான தேர்தல் முறைமைகளை ஏற்படுத்தும் விதமான எந்தவொரு சட்டத்துக்குமான ஆணையினை அரசியலமைப்பானது கொண்டிருக்கவேண்டும்.

- விகிதாசார பிரதிநிதித்துவ, தேசிய பட்டியல்கள், முன்னுரிமை அடிப்படையில் ஆண் பெண் வேட்பாளர்களின் பெயர்கள் மாறி மாறி அடுத்தடுத்து வரும்படியான பட்டியல் அமைப்பினைக் கொண்டிருக்க வேண்டும். அதிக சதவீதமான பெண் வேட்பாளர்களை பட்டியலில் கடைசிக்குத் தள்ளுவதன் மூலம் அவர்களுள் அதிகமானோரை வெல்லமுடியாத இடங்களில் வைப்பது போன்ற சனநாயகத்துக்குப் புறம்பான செயற்பாடுகளில் கட்சிகள் ஈடுபடுவதை இந்த நிபந்தனை தடுக்கிறது.

- விகிதாசார பிரதிநிதித்துவப் பட்டியலோ அல்லது தேசியப் பட்டியலோ அல்லது இரண்டுமோ தேர்தல் ஆணையகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்பு அதில் எந்தவொரு சேர்ப்போ மாற்றமோ செய்யப்படக் கூடியதாய் இருத்தலாகாது.

- பன்மைத்தன்மை கொண்ட தேர்தல் தொகுதிகளுக்கு பல்லுறுப்பினர் தொகுதிகள் பரிந்துரைக்கப்படக்கூடியன (பாராளுமன்ற, மாகாணசபைத் தேர்தல்களுக்கு).

- தற்போது உறுப்புரை 104(b) இல் உள்ளவாறான தேர்தல் ஆணையத்தின் கடமைகளும் செயற்பாடுகளும், எந்தவொரு பதிவு செய்யப்பட்ட கட்சியினதும் வேட்பாளர் நியமனப் பட்டியலின் ஆகக்குறைந்த ஒதுக்கீட்டினை உறுதிப்படுத்தும் கடமையினையும் உள்ளடக்க வேண்டும்.

- பெண்கள் தேர்தலில் போட்டியிடுவதை இயலுமாக்கத்தக்க புறச்சூழல்களை உருவாக்குவதற்கான, அரசியல் கட்சிகளதும் தேர்தல் ஆணையகத்தினதும் கடமை, சட்டரீதியான ஏற்பாடுகள் வழியாக அவசியமாக்கப்படல் வேண்டும். அனைத்துக் கட்சி முடிவுகளை மேற்கொள்ளும் உறுப்பு அமைப்புக்களில் ஆகக்குறைந்தது 30% பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது, பதிவு செய்ய அல்லது பதிவினைப் புதுப்பிக்க நாடும் கட்சிகளுக்கு சட்டரீதியாக அவசியமாக்கப்படல் வேண்டும்.

- தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கான நடத்தை விதித்தொகுப்பு ஒன்று இருக்கவேண்டும். நடத்தை விதிகளை மீறுபவர்கள் நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்படத் தக்கதாகவோ அல்லது மீள அழைக்கப்படக் கூடியதாகவோ இருத்தல் வேண்டும்.

- ஒரு வேட்பாளருக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றுக்கும் வாக்களிப்பதில் ஒரு வாக்காளர் வழங்கும் ஆணையினை அங்கீகரிப்பதன் மூலம், அரசியல் கட்சிகளிடையே தாவுவது அரசியலமைப்பு ரீதியாக கட்டாயம் தடை செய்யப்படல் வேண்டும். எவராயினும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர், தான் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட கட்சியல்லாது வேறொரு கட்சியை பிரதிநிதித்துவப் படுத்த நாடினால், அவர் வாக்காளரின் உரிமைகளை மீறுவதாகக் கருதப்படுவதோடு பாராளுமன்றத்தில் அவரது ஆசனத்தை விட்டு விலக்கப்படவும் வேண்டும்.

- மக்களது ஆணையையோ அல்லது நடத்தை விதிகளையோ மீறும், அரசாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை மீள அழைப்பதற்கான முறைமை ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் இனுடைய பாராளுமன்ற உறுப்பினர்களை மீள அழைக்கும் சட்டம் 2015 இனை இவ்விடயத்தில் ஒரு வழிகாட்டலாகக் கொள்ளலாம்.

- வேட்பாளர்களாலும் வேட்பாளர்களுக்காகவும் செய்யப்படும் தேர்தல் தொடர்புடைய செலவுகளுக்கு ஒரு வரையறை இருக்கவேண்டும். நிதி நன்கொடைகளின் மூலங்களும் தொகையும் வெளிப்படுத்தப்படல் வேண்டும். வேட்பாளர்களை பொறுப்புக்கூறச்செய்யும் கடுமையான முறைமை ஒன்று சட்டத்தின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

- போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் தமது சொத்து மற்றும் பொறுப்பு கணக்கினை தேர்தலுக்கு முன்னர் பிரகடனப் படுத்தவேண்டும். அத்துடன், தேர்வு செய்யப்பட்டால், தமது பதவிக்காலம் முடியும் வரை ஒவ்வொரு ஆண்டும் அக்கணக்கினை பிரகடனப்படுத்த வேண்டும். இத்தகவல்கள் சரியா இல்லையா

என பொதுமக்களில் எவரும் கேள்வி கேட்கக் கூடியவாறு இது பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

- அரசங்கத்தில் பதிவு செய்த புலம்பெயர் தொழிலாளர்கள் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படுவதுடன் அதற்கான பொருத்தமான பொறிமுறை ஒன்றும் அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

- தேர்தலின்போதான பரப்புரைகளுக்கான நெறிமுறைகள் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அரசு, ஊடகங்களில் சமமான நேர ஒதுக்கத்தை - குறிப்பாக மட்டுப்பாடான வளங்களைக் கொண்ட வேட்பாளர்களுக்கு - வழங்கவேண்டும். சூழலுக்கு நட்பான தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளும் பொதுமக்களது அன்றாட வாழ்வில் அளவுக்கு மீறி தலையீடு செய்யாத பரப்புரை நடவடிக்கைகளையும் ஊக்கப்படுத்தவேண்டும்.

### H) பரவலாக்கம் / அதிகாரப் பரவலாக்கம் / அதிகாரப் பகிர்வு

- புதிய அரசியலமைப்பானது பதின் மூன்றாவது திருத்தத்தின் போதாமைகளை, தற்சார்பற்ற பகுப்பாய்வின் மூலம், தற்போது பகிரப்பட்டுள்ள அதிகாரங்களில் குறைவேற்படாதபடி கட்டாயம் தீர்த்துவைக்க வேண்டும்.

- சமூகப் பன்மைத்துவத்தின் மேலும் சிறப்பான பிரதிநிதித்துவத்தையும் மத்திய-மாகாண நிறுவனங்களிடையேயான மேலும் சிறப்பான வலுச் சமநிலையையும் உறுதிப்படுத்தி, முடிவெடுக்கும் அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் சனநாயக அரசொன்று பலப்படுத்தப்படுகிறது.

- உள்ளூராட்சிக்கும் அரசாங்க, நிர்வாக கட்டமைப்புக்களின் ஏனைய மட்டங்களுக்கும் இடையில் செயற்பாடுகளில் பிரதியாக்கம் இருக்கக்கூடாதது கட்டாயமாகும்.

- உள்ளூராட்சியின் அதிகாரங்கள் கட்டாயமாக அரசியலமைப்பில் வரையறுக்கப்படவேண்டும். தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களுக்கு கட்டாயமாக உரிய அங்கீகாரம் வழங்கப்படுவதுடன் ஆளுநர் அலுவலகத்தின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படவும் வேண்டும்.

- பகிரப்பட்ட அதிகாரத்தின் கூட்டுப் பொறுப்பினதும் பொறுப்புக்கூறலினதும் விழுமியங்களை தெரிவுசெய்யப்பட்ட மாகாணசபை உறுப்பினர்கள் கொண்டிருப்பர்.

## I) நீதித்துறை

**அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்தை பரவலாக்கல்**

- அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கம் பரவலாக்கப்பட வேண்டும். இது மாகாணங்களில் நீதிக்கான அணுகலைப் பெறுவதற்கான ஓர் அர்த்தமுள்ள நடவடிக்கையாக இருக்கும். இந்த பரிந்துரை தென்னாப்பிரிக்க மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.

- அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்திற்கான மாகாண அணுகல் சுற்றமர்வில் உள்ள மேல் நீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் அடிப்படை உரிமைகள் நியாயாதிக்கத்தால் உறுதி செய்யப்படும்.

**உயர்நீதிமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம்**

- பெண்களின் பிரதிநிதித்துவம் உயர்நீதிமன்றத்தில் இருக்க வேண்டும். கடந்த கால அனுபவங்களிலிருந்து இது தெளிவாகிறது. உதாரணமாக, உள்ளூராட்சி மன்றங்களிலும் இன்னும் பல விடயங்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது குறித்து உறுதியான நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பில் உயர் நீதிமன்றம் ஆழ்ந்த பழமைவாதத்தைக் கொண்டுள்ளது. எனவே, பெண்களின் பிரதிநிதித்துவம் மட்டுமே நம்பிக்கையை உறுதிப்படுத்தக்கூடியது.

**நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் நியாயமான மீளாய்வு**

- நீதித்துறை மீளாய்வின் பரந்த மற்றும் விரிவான அதிகாரங்களுக்கு மேலதிகமாக, புதிய அரசியலமைப்பில் உள்ள விதிகளின் அடிப்படையில், தற்போதுள்ள அனைத்து சட்டங்களையும் மீளாய்வு செய்வதை உறுதிப்படுத்த அரசியலமைப்பு உயர்நீதிமன்றம் மூலம் அரசின் மீது ஒரு கடப்பாட்டை வைத்திருக்க வேண்டும்.

- சட்டத்தை மீளாய்வு செய்வதற்கோ அல்லது அரசியலமைப்பை விளக்குவதற்கோ ஒரு நீதிமன்றம் பின்வரும் விடயங்களை கையாள பரிந்துரைக்கப்படுகிறது:

    a. அரசியலமைப்பின் நோக்கம், கருத்தியல் மற்றும் இலக்கினை ஊக்குவிக்க வேண்டும்.

    b. திறந்த, சமமான, ஜனநாயக, பல்லின சமுதாயத்திற்கு அடித்தளமாகவுள்ள விழுமியங்களை மேம்படுத்த வேண்டும்.

    c. சர்வதேச சட்டத்தை கருத்தில் கொள்ளலாம்; அத்துடன்,

    d. வெளிநாட்டு சட்டத்தை கருத்தில் கொள்ளலாம் (பிற நியாயாதிக்கங்களில் உள்நாட்டு சட்டம்)

- அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு ஆண்டுகளுக்குள், நீதிமன்றத்தின் மீளாய்விற்குக் கொண்டுவரப்பட்ட எழுத்திலான,

எழுத்திலல்லாத அனைத்து சட்டங்களும், உயர்நீதிமன்றத்தால் திறனாய்வு செய்யப்படலாம். உயர்நீதிமன்றம் அத்தகைய எந்தவொரு சட்டத்தையும் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தின் எந்தவொரு விதிமுறைகளுக்கும் பொருந்தாது என்று அறிவிக்கலாம், மேலும் அத்தகைய சட்டத்தை ஏற்புடையதாக்கக்கூடிய முன்மொழியப்பட்ட திருத்தங்கள் குறித்து பரிந்துரை செய்யலாம்.

- நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் அரசியலமைப்பிற்கு ஏற்புடையதா என்பது குறித்த நீதிமன்றத்தின் தீர்மானமானது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் மீது பின்னோக்கிய விளைவைக் கொண்டிருக்காது.

## J) பொது நிதி

- பெண்களின் உரிமைகளை முன்னேற்றுவதில் நிதி விநியோகத்தின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை உருவாக்கும் பணியில் அதிக வெளிப்படைத்தன்மையும் கட்டாய ஆலோசனையும் அவசியம். குறிப்பாக, பொது நிதி தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடுகள், பெண்கள் குறித்தான விடயங்களை பிரதிபலித்து, வள ஒதுக்கீடுகளும் பங்கீடுகளும் கணக்கிடப்படுவதை உறுதிப்படுத்தி, பாலின வரவு செலவுத் திட்டத்தின் கொள்கைகளை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

- நிதி நிர்வாகத்தில் பாலின சமத்துவத்தை உறுதிப்படுத்த தேசிய, மாகாண, உள்ளூராட்சி மன்றங்களின் அனைத்து சட்டங்களும் கொள்கைகளும் தரப்படுத்தப்பட்ட பாலின சமத்துவ தாக்க விளைவு மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படுவது பரிந்துரைக்கப்படுகிறது.

- மேலும், வருடாந்த தேசிய, மாகாண வரவு செலவுத் திட்டங்கள் பாலின தாக்க விளைவு அறிக்கையுடன் செலவினங்களையும் பொது சேவை வழங்கலையும் பாலின கண்ணோட்டத்தில் கண்காணிக்கவும் பொது வளங்களுக்கான பெண்களின் அணுகலை மேம்படுத்தவும் வேண்டும்.

## K) பொது பாதுகாப்பு

- கணிசமான உரிமைகள் அவசர காலங்களில் பாதுகாக்கப்படும் வகையில், மீறமுடியாத் தன்மை கொண்ட உரிமைகளாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என சர்வதேச சட்டம் ஆணையிடுகிறது. பாரிஸ் கோட்பாடுகள் மற்றும் அரசியலமைப்பில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் மீறப்பட முடியாதவை என அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- பிற அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏதேனும் மீறல்கள் பின்வரும் கடுமையான நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்படும்

a) மீறப்பட முடியாத உரிமைகளை நிர்ணயித்தல் (மீறப்பட முடியாத உரிமைகள் எவை என பெயரிடல்)

b) அறிவிப்பு கொள்கை, (அவசர காலங்களின் போது சில உரிமைகள் புறக்கணிக்கப்படலாம் என்று அதிகாரப்பூர்வ அறிவிப்பை பெற்றுக்கொள்வது ஒருவரின் உரிமை)

c) விகிதாசார விதி, (வரையறைப்படுத்தப்பட்ட உரிமைகள் அவசரகால பிரகடனத்தால் கவனிக்கப்பட வேண்டிய பாதுகாப்பு விடயங்களில் விகிதாசாரமாக இருக்க வேண்டும்) தேவையின் தரமும் கவனிக்கப்பட வேண்டும்.

d) அவசரகால பிரகடனங்கள் அந்த அவசரகாலத்துடன் மட்டுப்பட்டதாய் இருக்க வேண்டும்

e) பிற சர்வதேச கடமைகளுடன் ஒத்திசைவு,

f) மீறல் நடவடிக்கைகள் பாகுபாடற்றதாக இருக்க வேண்டும்.

- எந்தவொரு அவசர நடவடிக்கையும் பெண்களுக்கு பாகுபாடு காட்டக்கூடாது.



Women and Media Collective
Established 1984

## L) மேலே குறிப்பிடப்படாத ஆர்வமுள்ள பிற பகுதிகள்

**அரசியலமைப்பின் மொழி**

- அரசியலமைப்பு அனைத்து மொழிகளிலும் பாலின நடுநிலை மற்றும்பால் நிலை தெளிவுடன் எழுதப்பட வேண்டும்.

**சட்டமா அதிபரின் அலுவலகம்**

- இந்த அலுவலகத்தின் மையப் பங்கு மற்றும் பொறுப்புகளை கணக்கில் எடுத்துக் கொண்டால், சட்டமா அதிபர் அலுவலகத்தின் அடிப்படையிலான கொள்கைகளுடன் அவற்றுக்கு பிரத்தியேக ஒத்திசைவு உள்ளது என்பது மிக முக்கியமானது.

- உத்தியோகபூர்வ சட்டத்தரணிகள் அலுவலகத்தின் தலைமை சட்ட அதிகாரியாக இருந்து கொண்டு, இந்த அலுவலகத்தின் நீதி நிர்வாகத்தில் பங்காற்றக்கூடிய ஒரு சுயாதீன சட்டமா அதிபர் பெண்களின் நீதிக்கான அணுகலுக்கு தேவை.

- சட்டமா அதிபர் அலுவல செயற்பாடுகளைக் கையாளும் பிரிவிற்கான கடமைகளில் பின்வருவனவற்றையும் உள்வாங்கலாம் என்று பரிந்துரைக்கப்படுகிறது:

  a) சட்டவாட்சியை ஊக்குவித்தல், பாதுகாத்தல், நிலைநிறுத்தல், பொது நலனைப் பாதுகாத்தல்.

  b) நீதிமன்றங்கள் மூலம் நீதி நிர்வாகத்திற்கு உதவுதலும் பாதுகாத்தலும்.

  c) நீதிமன்றங்களின் செயல்பாடுகளைச் செயல்படுத்தும்போதும் அவற்றின் ஆணையை நிறைவேற்றும் போதும் நீதிமன்றங்களின் சுதந்திரம், பக்கசார்பற்ற தன்மை, கண்ணியம், அணுகல், செயல்திறன் ஆகியவற்றை உறுதிசெய்க.

**பொது வழக்குகளின் சுயாதீன பணிப்பகம்**

- அரசியலமைப்பு பொது வழக்கு விசாரணைக்கு ஒரு சுயாதீன பணிப்பகத்தை அறிமுகப்படுத்த முன்மொழியப்படுகிறது. பொது வழக்குகளை வழிநடத்தும் சிறப்புத் திறன்களைக் கொண்ட தனித்துவமானதும் சுயாதீனமானதுமான ஓர் அலுவலகத்தின் தேவையை பல நியாயாதிக்கங்கள் அங்கீகரித்தன. பொது, அரசியலமைப்பு நலன் - குறிப்பாக குற்றவியல் குற்றங்கள், பொதுச் சட்டம் - சம்பந்தப்பட்ட வழக்குகளில், திறம்பட உறுதிப்படுத்தப்படுவதை இது உறுதி செய்கிறது.

- ஒரு பொது வழக்குகளின் பணிப்பகம் (DPP) உள்ளார்ந்த கருத்து முரண்பாடுகளுக்கு பதிலளிக்கும்: அடிப்படை உரிமைகளை மீறியதாகக் கூறப்படும் அல்லது நீதித்துறை மீளாய்வுக்கு உட்பட்டதாகக் கூறப்படும்,

அரசியலமைப்பை நிலைநிறுத்துவதற்கும் அரசின் சிறந்த நலனுக்காக செயல்படுவதற்கும் கடப்பாடுள்ள பொது அதிகாரிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டமா அதிபர் அலுவலகத்தின் கட்டளைகளில் ஒன்றுக்கொன்று உள்ளார்ந்த கருத்து முரண்பாடுகள் தற்போது காணப்படுகின்றன. நபர்களின் பாதுகாப்பு, நீதி சிதைவு ஆகியவற்றை தடுப்பதற்கான கடமையை நிலைநிறுத்துவது போன்ற பாரம்பரிய பங்கு அவ்வப்போது சமரசம் செய்யப்படுகிறது. இதன் பின்புலத்தில், இந்த அலுவலகத்தை நிர்வகிக்கும் கொள்கைகள் குறித்த வலுவான அரசியலமைப்பு நிலைப்பாடு கட்டாயமாகும்.

- அரசாங்கத்தின் தலைமை சட்ட அதிகாரியாக இருக்கக்கூடிய சட்டமா அதிபர் அலுவலகத்தை அரசியலமைப்பு வரையறுக்கிறது என்பதையும், அத்தகைய அலுவலகத்தை அரசாங்கம் சார்பாக அன்றி அரசின் சார்பாக செயல்படும் பொது வழக்கு விசாரணை இயக்குநரிடமிருந்து வேறுபடுத்துகிறது என்பதையும் உறுதிப்படுத்த வேண்டியது அவசியம்.

- இதன் அடிப்படையில் பாராளுமன்றம் பொது வழக்குரைஞரின் சுயாதீன அலுவலகத்தை உருவாக்குவதற்கான சட்டத்தை இயற்றலாம். நீதித்துறை சேவை ஆணையம் இந்த அலுவலகத்தின் நியமனம் செய்யும் அதிகாரத்தை வைத்திருக்கும். இதன் மூலம் இந்த அலுவலகம் அன்றைய நிர்வாகத்தில் இருந்தும் சட்டமன்றத்திலிருந்தும் விடுபட்டு சுயாதீனமாக செயற்படலாம்.

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு சார்பாக சமர்பிக்கப்பட்டது

குமுதினி சாமுவேல்
திட்டப் பணிப்பாளர்

திலினி டி அல்விஸ்
திட்ட அலுவலர்

31 டிசம்பர் 2020